Dr. H. V. HANDE: Therefore, does this Government really feel that it is necessary to ask money from the Centre to enforce its Prohibition policy because of the fact that the prohibition policy has not met with the success which we all wanted it to meet with?

The Hon. Thiru C. N. ANNADURAI: Sir, shortcomings in the implementation of the prohibition policy is no argument for abolishing prohibition. I admit that there are shortcomings not only in regard to the implementation of the prohibition policy but also in regard to so many other things. Our aim should be to perfect its implementation and not to give up prohibition because of shortcomings.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய அழுத்தமான கொள்கைக்கு இப்பொழுது இருக்கக்கூடிய கஷ்டம் மத்திய சர்க்காரினுடைய சட்டம், விதி முறைகள். சட்டத்தினுடைய போக்கு, அமல் நடத்துவதற்கு கஷ்டம் ஏற்படுகிறது. நம்முடைய சர்க்காருக்கு முழு அதிகாரத்தை மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த சர்க்கார் எடுக்குமா?

(விடை இல்லை.)

முற்பகல் 10-30 **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். இராமச்சந்திரன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: நான் என்னுடைய கேள்வியை விளக்க விரும்புகிறேன். இதை அமல் நடத்துவதில் இருக்கக்கூடிய கஷ்டம் என்னவென்றால், சென்டிரல் ஆக்ட் அதற்கு இடைஞ்சலாக இருந்து கொண்டிருக்கிறது.. . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் திரு. இராமச்சந்திரன் அவர்களைக் கூப்பிட்டு விட்டேன். அவர் கேள்வி கேட்ட பிறகு வேண்டுமானால், உங்களுக்கு இடம் கொடுக்கலாம். இப்பொழுது நீங்கள் உட்காருங்கள்.

திரு. எஸ். இராமச்சந்திரன்: நமது நாட்டில் மதுவிலக்குக் கொள்கையை பூரணமாக அமல் படுத்துவதிலே எவ்வளவு வருவாயை இழக்கிறோம் என்பதை முதலமைச்சர் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அதனால் எவ்வளவு பொருள் இழக்கிறோம் என்ற கணக்கு கூட எனக்கு அவ்வளவு முக்கியமாகத் தெரியவில்லை. அதனால், எவ்வளவு பண்பாட்டை வளர்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் முக்கியமாகத் தெரிகிறது. நாமெல்லாம் வாலிபர்களாக இருந்தபொழுது, சிறுவர்களாக இருந்தபொழுது வீதி முழுவதும், வீடு முழுவதிலும் குடித்து விட்டவர்கள் செய்யும் அமளிகளும், குளறுபடிகளும் குடும்பங்களை சிதைக்க வைக்கும்படியான நிலைமை இருந்தது. இன்றைய தினம் அந்த நிலைமை நீக்கப்பட்டிருப்பது பொருளாதாரத் துறையில் எத்தனை ரூபாய் என்று கணக்கு எடுத்தால் தெரியாது. மக்களுக்கு அதனால் கிடைத்த மன நிம்மதிக்கு கோடானு கோடி என்று கணக்குச் சொல்லலாம்.

Special allowence to Police Personnel.

* 124 *Q.*—Thiru N. KASIRAMAN,
Thiru N. S. V. CHITHAN: } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the police constables and others belonging to the Police Department were given a special allowance of Rs. 2 per month in view of the appreciation of the service rendered by them during the Anti-Hindi agitation of 1965 and subsequently

by th

(*b*) whether this special allowance was stopped immediately after the present Government assumed office ; and

(*c*) whether the Government have decided to recover the amount that had been paid as special allowance from the personnel belonging to the Police Department at the rate of Rs. 11 per month ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்

மூடப்பட்ட கோவை ஆலைத் தொழிலாளர் வெளி மாநிலங்களுக்குச் சென்றதும் தாக்கப்பட்டு திரும்பியதும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. என். குமாரசாமி அவர்கள் "அண்மையில் கோவை பகுதியில் இருந்து சென்ற மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்கள் வெளி மாநிலங்களில், வேலைக்காகச் சென்றுதாக்கப்பட்டு, உடைமைகள் கைப்பற்றப்பட்டு, தமிழ் நாட்டிற்கே திரும்பி வருகின்றனர்" என்ற அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்கவேண்டுமென்று பேரவையின் விதி 42-ன் கீழ் ஓர் அறிவிக்கை கொடுத்திருக்கிறார். இது அரசினரின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்டது. மேலும் மூடப்பட்ட ஆலைகளின் பிரச்சினைபற்றி இங்கே விவாதிப்பது முறையற்றது. எனவே, இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். முதல் அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்விக்குப் பதில் அளித்தார். இது முக்கியமான பிரச்சினையாக இருந்தும், மூலக்கேள்வி போட்ட எனக்கு ஒரு துணைக்கேள்வி போடுவதற்கு தாங்கள் அனுமதிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல. உறுப்பினர்கள் பாயிண்டு ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்திருந்து எதை வேண்டுமானாலும் பேசுவது கூடாது என்று பல தடவை சொல்லியிருக்கிறேன். இது பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை. பாயிண்டு ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்து எதை வேண்டுமானாலும் சொல்வதற்கு இந்தச் சபை இடம் கொடுக்காது.

3. தகவல் கோரல்

விநாயக சதுர்த்திக்கு விடுமுறை

Thiru K. VINAYAKAM : On a point of information, Sir, Tuesday happens to be the birthday of Lord Vinayaka. That day used to be generally declared a holiday under the Negotiable Instruments Act. Is it going to be done now or is the Government going to declare all offices closed ? Even if the Government does not close down all offices on that day, what about this House ? Are we going to sit on that day ? What is your decision, Sir ? I believe the Hon. Chairman of the Legislative Council has declared a holiday for the Council for that day. If we have a sitting in the evening of that day, they want to have a holiday. We are mostly